காலங்கள் நீண்டாலும் மாவீரரே
ஈழம் கருவாகி உருவாகும் மாவீரரே 2
கல்லறை இடிந்தாலும் மாவீரரே
உங்கள் கனவுக்கு அழிவில்லை மாவீரரே

நீங்கள் வீழ்ந்த மண்ணின் மீது சபதம் செய்கின்றோம்
நீங்கள் எங்கள் தேசம் இன்று உறுதி சொல்கின்றோம் 2

காலங்கள் நீண்டாலும் மாவீரரே
ஈழம் கருவாகி உருவாகும் மாவீரரே 2

புழுதி மண் வாசங்கள் புலிகளின் பாசங்கள்
ஈழத்தின் வாழ்விலே வீரயுகம்
புறப்படும் பாதைகள் புயல்களின் பயணங்கள்
வீரத்தின் யாகத்தில் ஈழ முகம் 2
மாவீரர் காலந்தான் பொற்காலம் எங்கள்
மன தெல்லாம் நிறைந்தாடும் தமிழீழம்
உயிரால் எழுதும் கவிதை
உரிமைக்கு உயிராகும்
கல்லறைக் காவியம் உயில் எழுதும் 2

காலங்கள் நீண்டாலும் மாவீரரே
ஈழம் கருவாகி உருவாகும் மாவீரரே 2

விழியனல் வோர் மக்கள் காந்தனில் வாசங்கள்
தேசத்தின் திசைகளின் ஈகைத்தடம்
குளிகளில் வாழ்கின்ற விடுதலை ராகங்கள்
தமிழரின் இதயத்தின் வீரசுகம் 2
மார்பினில் குண்டேந்தேந்தி வீழ்ந்த உள்ளம்
வீர மரணத்தால் சாதனை எழுதி வெல்லும்
கடலும் நிலமும் வானும் தமிழ் வாழக் களமாகும்
கார்த்திகை மாதம்தான் விடிவெழுதும் 2

காலங்கள் நீண்டாலும் மாவீரரே
ஈழம் கருவாகி உருவாகும் மாவீரரே 2

இசைதட்டு :
அகம் கலையகம்